DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.101/2025**

Deposition of Witness : PW-1 (முதல் மனுதாரர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தேவி | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 22.01.2026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 11.52 மு.ப

நான் இம்மனுவின் முதல் மனுதாரர். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைகள் தான், அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **ம.சா.ஆ–1** முதல் **ம.சா.ஆ–13** வரை குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

(ம.சா.ஆ.1, ம.சா.ஆ.7 முதல் ம.சா.ஆ.11, ம.சா.ஆ.13 ஆவணங்கள் அசல் மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள், ம.சா.ஆ.2 முதல் ம.சா.ஆ.6, ம.சா.ஆ.12 ஆவணங்கள் உரிமையியல் நடைமுறைச்சட்ட கட்டளை 7 விதி 14(3)ன் படியாக மனுதாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.)

1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்.

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.22 12:59:09 +0530

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்தில் இறந்துபோன சதீஸ்குமாரின் மனைவி என்றால் சரிதான். எனது கணவரின் வேலை வருமானத்தை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. TN 60 AM 9768 இருசக்கர வாகனத்தை ஓட்டிச்செல்லும்பொழுது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த வாகனம் எனது கணவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். விபத்து 24.02.2025ம் இரவு 10.30 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். எனது கணவர் டம்டம் பாறை வளைவான பாதையில் மலையிலிருந்து கீழே இறங்கி வரும்பொழுது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தில் TN 24 S 9454 என்ற டிப்பர் லாரி கீழிலிருந்து மலையை நோக்கி சென்றபொழுது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை சரியாகத்தான் ஓட்டிச் சென்றார் என்றால் சரியல்ல. எனது கணவர் வேகமாகத்தான வாகனத்தை இயக்கி வந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர்தான் அதிவேகமாகவம் அஜாக்கிரதையாகவும் தலைக்கவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டி வந்து தனக்குத்தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதை முதல் தகவல் அறிக்கையிலோ குற்ற அறிக்கையிலோ நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் இருசக்கர வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறுதான் உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் பெரியகுளம் நீதித்துறை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தேவதானபட்டி காவல் நிலையத்தில் கொடுத்த குற்ற அறிக்கைக்கு எதிராக வழக்கு நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவருக்கு பின்னால் வந்த ஆறுமுகம், பாண்டிமுருகன் ஆகியோர் ஓட்டி வந்த வாகனத்திற்கு எந்த சேதரமும் இல்லை என்றால் சரிதான். ஆறுமுகம், பாண்டிமுருகன் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். 1, 2 எதிர்மனுதாரர்கள் விபத்து நடந்ததை குறித்து 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்திற்கு தகவல் சொல்லவில்லை என்றும் அது காப்பீட்டு விதிமீறல் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.22 12:59:14 +0530

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.02 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.22 12:59:18 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 22.01.2026